# பிரிட்டன் மூட்டையைக் கட்டுகிறது!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

| | | |
|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணு | சென்னை: ஆடி மீ 13௳ புதன் (28—7—54) | மலர்: 2 |
| இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி மீ 14௳ வியாழன் (29—7—54) | இதழ்: 38 |

# டில்லி உத்தியோகம் சதமல்ல!

—(:)—

## பார்ப்பனர்களுக்கு எச்சரிக்கை!

## இலட்சியத்தை அலட்சியப்படுத்துவது ஆபத்து

## கொந்தளிக்கும் கடலில் உல்லாசப் படகு

## மயிலையில் சி. என். ஏ. பேச்சு

25—7—54 ஞாயிறு அன்று மாலை மயிலாப்பூர் தி. மு. கழகம் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணதுரை அவர்களின் வரலாற்றுச் சிறப்புடைய பேருரையின் ஒரு பகுதி முன் இதழில் தந்திருந்தோம். பிற்பகுதியின் சாரம் இங்கே தரப்படுகிறது:—

"பார்ப்பனர்களிலே பலர் திராவிடப் பிரிவினையை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள். இன்று அவர்களிலே சிலருக்கு டில்லி சர்க்கார் அலுவலகத்தில் கிடைத்திருக்கும் உத்தியோகத்தை சதம் என எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் போலும்!"

"மூத்தவளை அவருக்குத் தந்தேன்; அவருக்கு டில்லி சேக்ரட்டரியேட்டில் வேலை இளைய மகளான கோமளாவுக்கும் இன்னும் வரன் தேடுகிறேன். அமைகிற வரனும் சேக்ரட்டரியேட் உத்தியோகஸ்தராயிருந்தால் நல்லது" என்று எண்ணுகின்ற பார்ப்பன நண்பர்களுக்குச் சொல்கிறேன்: டில்லியில் வேலை பார்ப்பதால் கிடைக்கும் சம்பளத்தைக்கொண்டே தனக்கு ஒரு கம்பளிக் கோட்டும் மனைவிக்கு ஒரு பட்டுச் சேலையும் வாங்கிக்கொள்ள வேண்டுமானால் மட்டும்தான் காசு மிச்சப்படக் கூடும். அதையே சதம் என பார்ப்பனர்கள் எண்ணிவிடக்கூடாது.

டில்லியில் ஏற்கெனவே தென்னாட்டவர் மீது வெறுப்புத் தோன்ற ஆரம்பித்துவிட்டது. சமீபத்தில் கொல்லம் வந்திருந்த நேரு, "குஜராத்தியே; மார்வாரியே வடநாட்டானே! வெளியேறு" என்று சுவர்களில் எழுதியிருப்பதைக் கண்டித்து, "நாங்கள், டில்லி செக்ரடேரியட்டில் வேலை பார்க்கும் தென்னாட்டவரை வெளியேறு என்று சொல்ல எவ்வளவு நேரமாகும்" என்று குறிப்பிட்டார். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நேருவின் வார்த்தைகள் டில்லிக்காரருக்கு எவ்வளவு குளிர்ச்சியாயிருந்திருக்கும் என்பதை எடுத்துக் காட்டத்தான். டில்லியில் உள்ளவர்கள், உங்களைத் தாக்குகிற நிலை வரத்தான் போகிறது. அந்த வெறுப்புணர்வு அவர்களிடம் வளர்ந்துகொண்டிருக்கிறது. அந்த நிலையில் உங்களை நீங்கள் இங்கு ஓடிவரும்போது வாவென்று வரவேற்க எங்கள் உள்ளத்தில் வாஞ்சை இருக்குமாறு நீங்கள் நடந்துகொள்ள வேண்டாமா?

இந்த நாட்டில் வாழும் மக்களின் நாருங்கள். பிச்சைக்காரர்களாய் பலரும், வேலையின்றி வேதனைப்படுவோர் பலருமாக இருக்கிறார்களே! இந்த நிலை மாற வேண்டுமென்பதில் உங்களுக்கு அக்கறை பிறக்க வேண்டாமா?

அதேபோது இந்த நாட்டு வளத்தையும், நாங்கள் வளர்த்திருக்கிற நாகரிகப் பண்பாட்டையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

உங்களிலே பலர் வாழ்க்கைப் படகை உல்லாசமாக ஒய்யாரமாக ஓட்டமுடிகிறது. ஆனால் கடல் கொந்தளித்தால் படகு படாத பாடுபடும் என்பதை உணரவேண்டாமா நீங்கள்?

காற்று வேகமாக அடித்தால், படகு என்ன ஆகும்?

(4-ம் பக்கம் பார்க்க)

# ஜாதி பேதம் சமுதாயத்தைப் பாழாக்குகிறது!

## ஜாதி வேறுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டும்

### பண்டித நேருவின் கருத்து

அஜ்மீர், ஜூலை 27—

"சமுதாயத்தில் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற பிரிவினை இருப்பது, தாழ்ந்தோர் என்று அழைக்கப்படுவோருக்கு இழைக்கப்படும் அநீதி என்பதுடன் சமுதாயத்தில் பலவீனம் நிலவுமாறு சேர்த்துவிட்டது"

இவ்வாறு அஜ்மீர் இராஜ்ய அரிஜன மாநாட்டைத் திறந்து வைக்கும்போது பண்டித நேரு கூறினார்.

ஜாதி வேறுபாடுகளை எல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டுமென்று அவர் மேலும் கூறினார்.

இப்போது இந்தியாவில் எல்லோர்க்கும் சமசந்தர்ப்பம் அளிக்கும் சமுதாயமொன்று உருவாக்கப்படுகிறது என்று பண்டித நேரு தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

# தாயகம் திரும்புவோருக்கு திட்டமேதும் இல்லையாம்!

## அது இராஜ்யங்கள் கடமை என்கிறார்

### இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றி தேஷ்முக்

கொழும்பு, ஜூலை 27—

இலங்கையில் சுற்றுப் பயணம் செய்யும் இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் நிருபர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில், இலங்கையிலிருந்து இந்தியக் குடிமக்கள், இந்தியா திரும்புவதால் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பிரச்சினைகளை இந்தியா சமாளிக்குமென்று கூறினார்.

"இலங்கையில் தற்காலிக பர்மிட் வாசம் தீர்ந்து போய் இப்போது தாய்நாடு திரும்பும் இந்தியர்களின் புனர் வாழ்விற்காக திட்டமேதும் உள்ளதா?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில், இது இராஜ்ய சர்க்கார்களின் கடமை என்றும், பலவிதமான புனர் அமைப்பு திட்டங்களை அவர்கள் செய்ய வேண்டுமென்றும், தற்போது அம்மாதிரியான திட்டங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

# சூயஸ் பகுதியிலிருந்து வெளியேற்றம்!

## எகிப்தின் மகத்தான வெற்றி

## புதிய ஒப்பந்தம் பகையை ஒழிக்கும்

## புது வாழ்வும் புது உறவும் பூத்திடும்

கெய்ரோ, ஜூலை 27—

எகிப்திய மண்ணிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியத் துருப்புக்கள் வெளியேறுவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது!

இன்னும் இருபது மாதங்களில், சூயஸ் கால்வாய் பகுதிகளில் உள்ள சுமார் 73,000 வெள்ளைத் துருப்புக்கள் வெளியேறி விடுவர் என்று தெரிகிறது.

எகிப்தின் முக்கிய நகரங்களில் சென்ற யுத்தத்தின் போது பாதுகாப்புக்காகக் கொண்டு வரப்பட்ட பல வகைப் படைகளும் 1947-ல் வெளியேற்றப்பட்டன. என்றாலும் சூயஸ் கால்வாய் பகுதிகளில் வெள்ளை ஏகாதிபத்தியம் வைத்துக் கொண்டிருந்த ராணுவ தளங்களை விட்டு தனது துருப்புக்களை திரும்பப் பெற்றுக் கொள்ள மறுத்து வந்தது.

இவைகளை வெளியேற்ற, எகிப்தியர் தொடர்ந்து கோரி வந்தனர். இந்தப் பிரச்னையை வைத்தே ஆட்சி பீட மாற்றங்களும் நிகழ்ந்தன.

இன்று, இங்கிலாந்து யுத்த மந்திரி அந்தோனி ஹெட்டும், எகிப்தியப் பிரதமர் கர்னல் அப்டல் நாசரும் சந்தித்து, வெள்ளைத் துருப்புக்கள் சூயஸ் பகுதியை காலி செய்வது பற்றிய ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

கடந்த ஒரு நூற்றாண்டிற்கு மேலாகவே, எகிப்தில் தொடர்ந்து இருந்துவந்த வெள்ளையரின் ராணுவம் இன்று இந்த ஒப்பந்தத்தின் மூலம் விரட்டப்படுவது, எகிப்திய சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்ற சம்பவமாகும் என்று சொல்லப்படுகிறது.

புதிய ஓர் உலகமே உருவாகி விட்டதாக எகிப்தியப் பிரதமர் அப்டல் நாசர் மகிழ்ச்சியுடன், ஒப்பந்தத்திற்குப் பிறகு அறிவித்தார். வெள்ளையருடன் எகிப்தியருக்கு புதியதொரு நட்பு உள்ளம் கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வழி செய்கிறதென்றும் அவர் அறிவித்தார்.

பிரிட்டன்—எகிப்திய, ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

1. வெள்ளைத் துருப்புகள் இன்னும் இருபது மாதங்களில், சூயஸ் கால்வாய் பகுதியிலிருந்து வெளியேறும்,

2. அரபு நாடுகளோ, எகிப்தோ அன்னியரால் தாக்கப்படுமானால் அப்போது தளம், நடவடிக்கைக்குரியதாகப் புதுப்பிக்கப்படும்.

3 இந்த ஒப்பந்தம் ஏழு ஆண்டுகள் நீடித்திருக்கும்.

4. பிரிட்டனின் ராணுவ தளவாடங்களைப் பாதுகாக்க 'பிரிட்டனின் சிவில் காண்ட்ராக்ட்' கம்பெனி ஒன்று தளத்தை மேற்பார்த்துவரும்.

சூயஸ் பகுதியில் மட்டும் வெள்ளை ராணுவ அமைப்பு 40 கோடி பவுன் மதிப்புடையதாம்.

# இரண்டு சீன விமானங்களை அமெரிக்கர் சுட்டுவீழ்த்தினர்

—(:)—

## மீட்சி வேலையிலிருந்த தங்களைத் தாக்கியதே காரணமாம்!

வாஷிங்டன், ஜூலை 26—

அமெரிக்க கடற் படையைச் சேர்ந்த விமானங்கள், கம்யூனிஸ்டு சீனாவின் இரண்டு யுத்த விமானங்களை நேற்று சுட்டு வீழ்த்தின.

வெள்ளியன்று பிரிட்டனது விமானமொன்றை தவறுதலாக சீனப் படையினர் சுட்டு விட்டனர் என்ற செய்தி வந்ததல்லவா? வீழ்த்தப்பட்ட பிரிட்டிஷ் விமானத்திலிருந்து மூன்று அமெரிக்கர் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்,

அதை ஒட்டி மறுநாள் இரண்டு அமெரிக்க விமானங்கள், விமானம் வீழ்த்தப்பட்ட இடத்தில் சென்று, மீட்சி வேலைகளில் ஈடுபட அனுப்பப்பட்டனவாம்.

அந்த இரு அமெரிக்க 'மீட்சி' விமானங்களையும் சீனர் தாக்க முற்பட்டனராம். ஆகவே, அமெரிக்கர்கள் சீன விமானங்கள் இரண்டைச் சுட்டுச் சாய்த்தனராம்.

ஏற்கனவே, பிரிட்டிஷ் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதற்காக சீனா வருத்தத்தைத் தெரிவித்திருப்பதுடன் விமானத்தில் இருந்த, உயிரிழந்தவர்களுக்கும் சேதமான பொருள்களுக்கும் தகுந்த நஷ்ட ஈடு கொடுப்பதாகவும் சீனா குறிப்பிட்டுள்ளது.

## விஜயலட்சுமி பண்டிட்

### நியாசலந்த் வருகை ஒத்திவைப்பு

ஐ. நா. சபைத் தலைவி விஜயலட்சுமி பண்டிட் தனது நியாசலாந்து சுற்றுப்பயணத்தை ஒத்திவைத்திருக்கிறார் என்று நியாசலாந்துப் பிரதமர் பீட்டி ஜாலக்கு தெரிவித்தார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—7—54 புதன்

# குடியேற்றம் தேர்தல்

குடியேற்றத்தில் நடைபெற இருக்கும் தேர்தல், தமிழகத்தின் கவனத்தை மட்டுமல்லாமல், இந்திய துணைக் கண்டத்தின் கவனத்தையே இழுத்துவிட்டிருக்கிறது. முதலமைச்சர் காமராஜர், தமது முப்பது நான்கு ஆண்டுக்காலம் பொதுப் பணியின் மூலம் கிடைத்திருக்கும் மகத்தான செல்வாக்கைப் பணயம் வைத்து இதிலே ஈடுபட்டிருக்கிறார்; கம்யூனிஸ்டு கட்சி, நெடுங்காலமாகக் காங்கிரஸ் ஆட்சியின் பேரில், பொது மக்களுக்குத் திரண்டெழுந்துள்ள வெறுப்புணர்ச்சியைச் சாதகமாக்கிக் கொள்ளும் வாய்ப்பாக இந்தத் தேர்தலைப் பயன்படுத்த எண்ணி தங்கள் முழு பலத்தையும் இதில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள்.

தீயில் குளித்தெழ வேண்டிய பயங்கர போராட்டச் சூழ்நிலைகள் இருந்த காலத்திலெல்லாம், காங்கிரசில் ஈடுபாடமலிருந்துவிட்டு, பதவியும் பவிசும் பெறும் கட்டம் வந்ததும், நாக்கைச் சொட்டவிட்டுக் கொண்டு, கதர்க் கடைக்கு சென்றும், காந்தி படம் வாங்கியும், காங்கிரசில் சேர்ந்தும் கனமும் ஆகிவிட்ட ராஜாக்களும், பிரபுக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்—காமராசர் அப்படிப்பட்டவரல்ல—காங்கிரஸ் பதவி பெற முடியும் என்று கனவு காணவும் முடியாத நிலை இருந்த நாட்களிலே, கடும் போராட்ட காலத்திலே உழைத்து, தியாகச் சின்னம் ஏற்று, கண்ணியமான ஊழியம் புரிந்து, தமிழகப் பொது வாழ்வில், தனிச் சிறப்புப் பெற்றவர்.

இதை, எந்தக் கட்சியினரும் உணர்வர்; மதிப்பளிப்பர்; அதிலும், ஜனநாயக நாட்களில், தோழர் பி. டி. ராஜன் கூறியிருப்பது போல 'பாமர மக்களின் பிரதிநிதிகளை'த் தான், பொதுமக்கள் ஆதரிப்பர்.

காங்கிரசில் சேரும்போதே இலட்சாதிகாரி, இப்போது அவர் கோடீஸ்வரர், என்று எவ்வளவு அற்புதத்தி படைத்தவனும் காமராஜரைப் பற்றிக் கூறிவிட முடியாது—அன்றும், இன்றும் ஒண்டிக் கட்டையாய் — காவி கட்டாத சாமியார் போல்— இருந்து வருபவர்—செல்வச் செருக்கெனும் சேற்றிலே — (பூர்வீகச் செல்வம், புதிய செல்வம் எனும் எவ்வகைச் செல்வமெனினும் சரியே) கிடப்பவரல்ல.

இது, எவர் மனதிலும் காமராசர் பால், அன்பும் மதிப்பும் எழுப்பிடத்தான் செய்யும்.

மிக மிகச் சாமான்யர், இந்தக் காமராசர் எனினும் இன்று தமிழரப் பொது வாழ்விலும், இந்தியத் துணைக் கண்டத்துக் காங்கிரஸ் அமைப்பிலும், அவருக்கு மிகச்சிறந்த ஓர் இடம், கிடைத்தது என்றால் இடையறாத் தொண்டும், நேர்மையான போக்கும், பாமர மக்களுடன் தோழமையும் கொண்டு பணியாற்றிய தன் பலன் என்பதன்றி வேறென்ன கூற முடியும். உண்மையுழைப்பால் உயர்ந்த ஒருவருக்கு 'ஓட்' அளித்து அவருடைய நேர்மையான தொண்டு தமக்கு நீடித்துக் கிடைக்கச் செய்து கொள்ள வேண்டுமென்றே, எவரும், இத்தேர்தலின்போது எண்ணுவர். குடியேற்றம் தொகுதியிலிருந்து நமக்குக் கிடைத்து வரும் செய்திகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

காமராஜரின் தனிப்பட்ட குணங்கள் கண்டு மக்கள் ஆதரவு தர முன்வந்திருப்பதுடன் ஆச்சாரியார் வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தை அகம்பாவத்துடன் புகுத்தி அதை எதிர்த்தவர்களை ஆணவத்தோடு அடக்க முனைந்த கொடுமைபால், மனம் குமுறிய மக்களெல்லாம், காமராஜர் பதவி ஏற்றதும் முதல் வேலையாக அந்த கல்வித் திட்டத்தை ஒழித்தார், என்பதால், காமராஜரிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் காட்டி, ஆதரவு தர முன்வந்துள்ளனர்.

வெளிப்படையாகப் பேசாவிட்டாலும், காங்கிரசிலேயே ஒரு சிறு கும்பல், இந்தத் தேர்தல்; ஆச்சாரியார் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டது சரியா, சரியில்லையா, என்பதே இந்தத் தேர்தலின் பிரச்னை என்று டில்லி வட்டாரத்துக்குக் கூறி வருவதாக அறிகிறோம்.

இதை அந்தக் 'கோஷ்டி' பச்சையாகச் சொன்னால், மக்கள், இப்போது காட்டுவதைவிட பன்மடங்கு அதிகமான ஆர்வம் காட்டி, காமராஜரின் வெற்றிக்காக, வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்வர். இதை உணர்ந்தே அந்த 'கோஷ்டி' புற்றுக்குள்ளே பாம்பு இருப்பது போல, தங்கள் வஞ்சகத்தை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை நன்கு புரிந்துகொண்ட மக்கள், காமராசர் பக்கம் திரண்டு நிற்கிறார்கள்.

இந்தத் தேர்தலில், 'திராவிட நாடு' பிரிவினைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இரு அபேட்சகர்களுமே, ஒரே விதமான நிலைமையினர். எனவே, தி.மு. கழகம் இந்தத் தேர்தலில், பிரசாரத்தில் ஈடுபடவில்லை. ஆனால், கம்யூனிஸ்டு கட்சியினர், குடியேற்றம் தொகுதியில், நமது கழகத்தை விடாமல் தாக்கிப் பேசி வருகிறார்கள்—இது, நாம் முயற்சி எதும் எடுத்துக் கொள்ளாமலேயே, காமராசருக்குச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்கி வருகிறது,

உருட்டி மிரட்டியும், சாடிக் கூறியும் பழி சுமத்தியும் ஆதரவைப் பெறலாம் என்று கம்யூனிஸ்டு கட்சி எண்ணி, தி. மு. கழகத்தின் மீது வசைபாடி வருகிறது.

நாட்டின் நிலையை நிர்ணயிக்கத் தக்க பொதுத் தேர்தலின் போதே, திராவிட நாடு பிரச்னையை ஒப்ப மறுத்ததால், நாம் கம்யூனிஸ்டுகளை ஆதரிக்க மறுத்துவிட்டோம்—ஆஹா! என்றார்கள், இதோ பார் ஒழித்துக் கட்டுகிறோம் என்றார்கள், தி. மு. க. கலங்கவில்லை, கடமையைச் செய்தது. இப்போது குடியேற்றத்தில், கம்யூனிஸ்டு கட்சி கண்டிப்பது கண்டா கலங்கப் போகிறார்கள்! எள்ளி நகையாடுகிறார்கள்!!

"எங்கள் இனத்தின் எதிர்காலத்தையே பாழாக்க வந்த ஆபத்தான கல்வித் திட்டத்தை ஒழித்துக் கட்டி, எங்கள் மனதைக் குளிரச் செய்தார், இந்தக் காமராசர், அதற்கு நன்றி காட்டுவதற்காகவாவது நாங்கள் அவருக்கு 'ஓட்' அளிக்க கடமைப்பட்டிருக்கிறோம், கேட்கும் உரிமையும், அவருக்கு இருக்கிறது, கம்யூனிஸ்டுகளே! எங்கள் ஓட்டுகளைக் கேட்க, உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? எதற்காக உங்களுக்கு ஓட் அளிக்க வேண்டும்? எங்கள் திராவிட நாடு பிரச்னையை, சதா சர்வ காலம் கேலி பேசி வருகிறீர்களே அதற்காகவா! எங்கள் பகுத்தறிவுப் பிரசாரத்தை எள்ளி நகையாடி வருகிறீர்களே, அதற்காகவா! எங்கள் கழகத் தோழர்கள்மீது சமயம் கிடைக்கிற போதெல்லாம் தாக்குதல் நடத்துகிறீர்களே, அதற்காகவா? எங்கள் கழகத்துக்குள்ளே கலாம் விளைவிக்க முயற்சித்தபடி இருக்கிறீர்களே அதற்காகவா? எங்கள் இன எழுச்சியை எதிர்த்து வேலை செய்து வருகிறீர்களே அதற்காகவா? எதற்காக, உங்களுக்கு 'ஓட்' அளிப்பது! நாங்கள் உங்களை நம்பும்படியும், உங்களிடம் மதிப்பும் அன்பும் வைக்கும்படியும் நீங்கள் இதுவரை செய்த காரியம் ஏதாவது உண்டா? எங்கள் மனம், எதைக்கண்டு மகிழும் என்று நினைக்கிறீர்கள்? உங்கள் தலைவர் ஜீவானந்தம் 'ராம காதை' பாடிக் காலட்சேபம் செய்து வருகிறாரே, அதைக் கண்டா!—என்று குடியேற்றம் தொகுதியில் உள்ள திராவிடர்கள், கேட்கின்றனர். பதில் என்ன! மீண்டும் ஒரு மூச்சு தாக்கிப் பேசுகிறார்களே யொழிய தி. மு கழக ஆதரவு பெறுவதற்குக் கம்யூனிஸ்டு கட்சிக்கு, எந்தவகையில் உரிமை இருக்கிறது என்பதை எடுத்துரைக்கவில்லை—எடுத்துரைக்கவும் முடியாது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் நடைபெறுகிறபோது, ராமன் ஒடித்த வில் பற்றியும் பரதன் சுமந்த பாதுகை பற்றியும், அநுமன் கொண்டிருந்த வால் பற்றியும், பேசவும் எழுதவும் தான் நேரமிருக்கிறதே தவிர, ஆச்சாரியாருக்கு, காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சி துளியாவது எழும்பிற்றா? என்ன இதன் பொருள்?

"ஓய்! காமராசரை இந்தத் தேர்தலிலே மட்டும் தோற்கடித்து விட்டால்......"

"எப்படியாகிலும், அது சாத்தியமாகும்! அதுதான், இந்தத் திராவிடக் கும்பல் பூராவும், காமராசர் பக்கம் சேர்ந்திண்டிருக்கே..."

"ஆமாம், ஓய்! சும்மா ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன்; தோற்று, என்ன நடக்கும் தெரியுமோ?"

"நம்ம ஆத்திலே அக்கார வடிசல்... ... நிச்சயம்... உமக்கும் உண்டு......"

"ஓய்! விருந்து கிடக்கட்டும். காமராசர் விலகுவார், பிறகு, சுப்ரமணியம்......!

அப்படின்னு, என்ன அர்த்தம்...?"

"ஆச்சாரியார்னு தான்...!"

"நடக்குமா?"

"உம்! நடக்காது, ஓய்...!"

இப்படிப் பேசும் இடம் இருப்பது, திராவிடர்களுக்குத் தெரியும்!

குடியேற்றம் தேர்தலில் காமராசரைத் தோற்கடித்தால், அவர், பதவியைவிட்டு விலகுவார், உடனே, ஆச்சாரியாரின் அடிவருடியைக் கொண்டு அரசாங்கம் அமைக்கலாம், மீண்டும் அந்த ஆகாத கல்வித் திட்டத்தைப் புகுத்தலாம், வர்ணாஸ்ரமத்தை நுழைக்கலாம், கொழுக்கலாம், என்ற கெடுமதி கொண்டவர்கள் உள்ளனர், என்பதைத் தி. மு. க. அறியும். அந்தக் கெடுமதியினர், கம்யூனிஸ்டு கட்சியைக் கருவியாக்கிக் கொள்ள பேரம் நடத்தி இருக்கிறார்கள் என்பதையும் யூகிக்க முடிகிறது. இதனை அறிந்துதான் இன்று திராவிடர்கள், ஆச்சாரியார் கோஷ்டியின் அந்தரங்கச் சதியை முறியடிக்க, காமராஜரை ஆதரித்து வெற்றி பெறச் செய்தாக வேண்டும் என்று முனைந்து நிற்கிறார்கள். வெற்றி உறுதி என்பதற்கான செய்திகளே குடியேற்றம் வட்டாரத்திலிருந்து ஒவ்வோர் நாளும் வந்தவண்ணமுள்ளன.

## காமராசருக்கு பி. டி. ராஜன் ஆதரவு

"இன்றைய நிலையில் திரு காமராசரே முதன் மந்திரியாக இருக்க வேண்டும். அவர் ஆட்சி பீடத்தில் வெறும் அதிகார பலத்தாலேயே இருந்துவிடலாம் என்று தனக்கு முன்பிருந்தவர்களைப் போன்று எண்ணமாட்டார் என்று வெகுவாக நம்புகிறேன். இன்று நிலவும் சூழ்நிலைகளுக்கொப்ப, குடியாத்தம் வாக்காளர்கள் காமராசரை பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுத்து அவரை வெற்றி பெறச் செய்வார்கள் என்று திடமாக நம்புகிறேன். அவர் வெற்றி பெறாவிட்டால், அது வருந்தக் கூடிய விஷயமாகும். எனக்கு அவர் வெற்றி பெறுவார் என்பதில் முழு நம்பிக்கை இருக்கிறது. கவலை கொள்ள இடமில்லை; வெற்றி காமராசருக்கே!" என்று தோழர் பி டி ராஜன் குடியாத்தம் தொகுதி தேர்தலில் நிற்கும் காமராசரை ஆதரித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆப்பிரிக்கர்கள் எருதுகள் போன்றவராம்

ஜோகன்ஸ்பர்க், ஜூலை 26—

வெள்ளையர்களின் பண்ணைகளில் வேலை செய்யும் ஆப்பிரிக்க தொழிலாளர்களின் பொருளாதார அமைப்பில் ஒரு அம்ச முக்கியமானவர்கள் அல்லவென்றும், எருதுகளைப் போன்றுதான் அவர்கள் உள்ளனர் என்றும் தென் ஆப்பிரிக்க உள் நாட்டு விவகார அமைச்சர் டாக்டர் எச். எப். வெர்வேர்டு தேர்தல் கூட்டமொன்றில் கூறினார்.

தொழிற் சங்கங்களில் ஆப்பிரிக்கர்களுக்கு உறுப்பினர் பதவி அளிக்கக் கூடாதென்றும் அது மட்டுமின்றி, வெள்ளையர்களை ஆளும் எவ்விதமான அதிகாரமும் அவர்களிடம் கொடுக்கக் கூடாது என்றும் அவர் மேலும் கூறினார்.

## உள்நாட்டு 'கோமாதாக்'களின் கோர நிலை!

### பால் அருந்தாததற்குப் பண்டிதரின் சமாதானம்

ஆஜ்மீர். ஜூலை 25 —

"இந்தியாவில் மக்கள் பசுவை தெய்வமாக வழிபடுகின்றனர் அடிக்கடி ஆர். எஸ். எஸ். காரர்கள்கூட பசுக்களுக்காக அரசியல் கிளர்ச்சிகள் செய்கிறார்கள். ஆனால், உலகத்தில் இந்த நாட்டில்தான், பசு தெய்வமாக வணங்கப்படுவதாக இருந்தும், பசுக்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன"

—என்று பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் பண்டித நேரு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நான் வெளி நாடுகளில் சுற்றுப்பயணம் செய்யும் போது ஆரோக்கியமான பசுக்கள் பலவற்றைப் பார்க்கிறேன். அவைகள் சத்துள்ள பால் நிறையத் தருவதைக் காணவும் மகிழ்ந்திருக்கிறேன். நான் இங்கிருக்கும்போது பால் அருந்தும் பழக்கமுடையவனல்ல, என்றாலும் வெளிநாடு செல்லும்போது, பாலின் தரம் உயர்ந்ததாயிருப்பதால் அங்கு பால் பருகுவதற்கு பிரியப்படுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

## இந்தூர் கல்லூரி மூடப்படுகிறது

இந்தூர் கல்லூரி மாணவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக கல்லூரியை காலவரையின்றி மூடிவிடுவது என்று மத்திய பாரத் சர்க்கார் தீர்மானித்துவிட்டதாம். இக்கிளர்ச்சி சம்பந்தமாக பூரண விசாரணை செய்ய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

## டில்லி ராஜ்யத்தில்

### வெட்டுக்கிளிகள் படையெடுப்பு

புதுடில்லி, ஜூலை 23—

டில்லி ராஜ்யத்தில் 25 மைல் நீளத்திற்கு வெட்டுக்கிளிகள் கூட்டமாக படையெடுத்துள்ளன என்று தெரிகிறது.

சமீப ஆண்டுகளில் இம்மாதிரி வெட்டுக்கிளிகள் பெரும் அளவில் படையெடுத்தது கிடையாது என்று டில்லி ராஜ்ய அதிகாரி ஒருவர் கூறினார்.

இரண்டு அங்குல நீளமுள்ள இந்த வெட்டுக் கிளிகள் பஞ்சாபிலிருந்து வருகின்றனவாம்.

இதனால் 300 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

இந்த வெட்டுக் கிளிகளை அழிக்க ஏராளமான பேர், போலீசாரின் உதவியுடன் பாடுபடுகின்றனர்.

இதுபோல் உத்தரப் பிரதேசத்திலும் இரண்டு வெட்டுக்கிளி கூட்டங்கள் சென்றிருக்கின்றன என்று தெரிகிறது.

# நமது பகைவர் எங்கே? அரசியல் குப்பைகளை ஒதுக்குவீர்!

## பட்டியலைப் பாரீர்! பக்குவம் பெறுவீர்!

## தி. மு. கழகத் தோழர்களுக்கு ஈ. வெ. கி. சம்பத் அறிவுரை

"தி. மு. கழகத் தோழர்களின்முன் இன்று உள்ள பொறுப்புகள் மகத்தானவையாகும். இதுவரை தி. மு கழகம் நிறைவேற்றித் தந்திருக்கிற பொறுப்புகளும் சாதாரணமானவை அல்ல.

"பெரும் சாதனைகளையும் மக்களின் அளவற்ற நம்பிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ள கழகத் தோழர்கள் நாட்டிலே இன்று சிலர் நம்மைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது கண்டு கவலை கொள்ளத் தேவை இல்லை.

"நம்மை இன்று சிலர் எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, நம்மை எல்லாம் வாய்க்கு வந்தபடி மட்டரகமான வசவுகளை நம் மீது அபிஷேகம் செய்கிறார்கள் என்பதற்காகவும் கழகத் தோழர்கள் அஞ்சத் தேவையில்லை."

—என்று சைதை தி. மு கழக 4-வது ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் குறிப்பிட்டார்.

சென்னை, ஜூலை 27—

சென்னை சைதாப்பேட்டை தி. மு கழகத்தின் நான்காம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நேற்று மாலை 6-30 மணிக்கு சைதையில் நடைபெற்றது. தோழர் என். ஆர். வேலன் தலைமையில் தோழர்கள் பி. அண்ணமலை, அ. பொன்னம்பலனார், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசினர். பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தோழர் ஈ. வி. கே சம்பத் அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மழை பெய்ய ஆரம்பித்துவிடவே கூட்டம் தொடர்ந்து நடைபெற இயலாது கலைக்கப்பட வேண்டியதாயிற்று.

தோழர் சம்பத் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தி. மு கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை நமது கழகத்திற்கு இருந்துவந்திருக்கிற எதிர்ப்புகளை எண்ணிப்பார்த்தால் இப்போது தோன்றுகிற சிலரைப் பற்றி நாம் அஞ்சத் தேவையில்லை. இவர்கள் நமக்கு எதிர்ப்பே அல்ல என்பது தெளிவாகும். நமக்குத் தோன்றிய எதிர்ப்புப்பட்டியலை நான் சொல்கிறேன், வரிசைப்படுத்தி:

"ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை முதன் மந்திரியாக இருந்த காலத்தில் கழகம் ஆரம்பித்தோம். அன்று பலர் நினைத்தார்கள் நம்மை நசுக்கிவிட. நம்மை வளரவிடாது, இவர்கள் எல்லாம் அடிம்புள்ள இளைஞர்கள் என்று கூறி எதிர்ப்பு முகாம் அமைத்தனர்.

ஒரே வருடத்தில் அன்று 500-க்கும் அதிகமான கிளைகள் தி. மு. கழகத்திற்கு வேர் விட ஆரம்பித்ததும் ஓமந்தூரார் யோசித்தார். ஓராண்டிலேயே இவ்வளவு வளர்ச்சி இவர்களுக்கு எப்படி ஏற்பட்டது. என்று எண்ணிப் பார்க்கலானார். அவரது நண்பர்கள் அவருக்குச் சொன்னார்கள். அண்ணாதுரை அழகாக எழுதுகிறார், அவரது எழுத்தின் கவர்ச்சியிலே மயங்கி இளைஞர்கள் அவர்பின் செல்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படியா சேதி? அண்ணாவின் எழுத்தைத் தடுத்தால, கழகத்தின் வளர்ச்சி தடுக்கப்படுமல்லவா? என்று ஓமந்தூரார் எண்ணி, "ஆரிய மாயை" 'இலட்சிய வரலாறு" இவைகளுக்குத் தடை விதித்தார். அபராதம் ரூ. 700, தவறினால் ஆறு மாதம் சிறை என்று.

ஆனால் அவரது தடைகள் நொறுக்கப்பட்டன மக்களின் எழுந்த சக்தியால்.

பின் குமாரசாமி ராஜா முதன் மந்திரியானார். ஓமந்தூரார் விட்ட இடத்தில் தொட்டார் இவரும்—நம்மை அழித்துவிட நினைத்து, இவர்களின் நாடகங்களையும் சினிமாக்களையும் மக்கள் வெகுவாக ஆதரிக்கின்றனர். இந்த நாடகங்களையும் சினிமாக்களையும் தடை செய்தால் இவர்கள் அழிந்தொழிய மாட்டார்களா என்று எண்ணி, நாடகங்கள் பலவற்றிற்குத் தடை விதித்தார். தோழர் சி. பி. சிற்றரசு எழுதிய 'போர்வாள்' மு. கருணாநிதி எழுதிய 'நச்சு முடிவு' கவிஞர் பாரதிதாசன் எழுதிய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' ஆகிய நாடகங்களுக்குத் தடை விதித்தார்.

நமது கழகத் தோழர்கள் எழுதுகிற சினிமாப் படங்களில் கத்தரிகோல் பிரயோகங்களை வெகு தாராளமாகச் செய்தார். மந்திரியைப் பாத்திரமாகக் கொண்ட கதை என்று வந்தது; அது இந்த காங்கிரஸ் மந்திரிகளை மக்கள் கேவலமாகப் பேசத் தூண்டும் என்று எண்ணி— கத்தரித்தார். சினிமாவே நமது தோழர்களாலேயே எழுதப்படுகிறது என்றெண்ணி ஒரு பெரும் தணிக்கை 'போர்டை'யே நிறுவினார்.

என்ன ஆயிற்று அவரது அத்தனை முயற்சிகளும்? அவரது முயற்சிகள் நம்மை அழிக்க முடிந்தனவா என்றால் இல்லையாதே."

பின் அந்த ராஜா போய் 'ராஜாஜி' வந்தார்! ஸ்ரீரங்கத்தின் உலக்கை மாறுவது போல் ஒவ்வொரு முதன் மந்திரியும் தான் விலகும்போது நம்மை எதிர்க்கும் பணியை மற்றவரிடம் தந்துவிட்டே சென்றனர்.

ஆச்சாரியாரும் 'தேவாம்சம் பொருந்திய ஏதோ கேவலம் இந்த மனிதப் பிண்டங்களை ரட்சிக்க வந்திருக்கிறார். அவரது கருணையே கருணை! என்ற 'கல்கி'யாரின் வர்ணனையுடன் பதவி ஏற்றார்.

நாட்டிலே மலர்ந்திருந்த புதிய அரசியல் விழிப்புணர்வை அழிக்க பல வழி வகைகளையும் வகுத்தார் அந்த மகான். புதிய கல்வித் திட்டம் என்ற பெயரில் நமது வளர்ச்சியை சவாலுக் கழைப்பது போன்றே, ஜனநாயகத்திற்கு குழி தோண்டிவிட்டு, திட்டத்தை எதேச்சாதிகாரமாகப் புகுத்தினர். நாமும் திட்டத்தை எதிர்த்தோம், அவர் திட்டத்தைப் புகுத்திய முறையையும் எதிர்த்தோம்

என்ன ஆயிற்று? நம்மை எல்லாம் சிறைப்படுத்தினர். நாட்டிலே கிளர்ந்தெழுந்த எதிர்ப்பை அடக்க, அடக்கு முறை அம்புகளை ஏவினர்.

எங்களைச் சிறைக் கம்பிகளுக்கும் பின்னால் வைத்துவிட்டு, கழகத் தோழர்கள் பலர்மீது பயங்கர சதி வழக்குகளையும் ஜோடித்துவிட்டு தேனாம்பேட்டையில் பேசினார். இவர்களின் கணக்கைத் தீர்த்துக் கட்டுவேன். இவர்களே எனது முதல் எதிரி என்றெல்லாம் கூவினார்.

இன்று அவர் எங்கே? அவருக்கு இன்று அரசியலே ஒரு பெரும் வியாதியாகி, பழம் வால்மீகி ராமாயணப் புத்தகத்தின் பக்கங்களில் இருக்கும் மூட்டைப் பூச்சிகளை ஒதுக்கிவிட்டு அவைகள் இருந்த இடத்திலே இவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

நம்மை எதிர்த்துப்பார்த்து தோல்வி கண்ட அந்த அசகாய சூரர்கள் எல்லாமே குப்பைமேட்டிலே ஒதுங்கிவிட்டபோது, ஏற்கனவே குப்பை மேட்டில் ஒதுக்கிக் கிடந்த சில, காற்றடிக்கிற காரணத்தால் பறந்து எழுந்து வந்து ஏதேதோ சொல்கின்றன என்றால் நாம் ஏன் அது பற்றிக் கவலைப்பட வேண்டும். ஏதோ அந்த நொந்த மனிதர்கள் எல்லாம், நம்மைக் கோழைகள் என்றும் அவர்களை வீரர்கள் என்றும் சொல்லிக் கொள்கிறார்களாம். அவர்கள் ஏதோ காலையில் எழுந்ததும் இரத்தத்திலேயே முகம் கழுவி, கை கழுவி இரத்தத்திலேயே குளித்து குடித்து இரத்தத்திலேயே நீந்திக் கொண்டிருக்கும் பராக்கிரமசாலிகள் போலவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இது பற்றி எல்லாம் நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை; அன்று நம்மை எதிர்த்தவர்கள் இன்று எங்கே இருக்கிறார்கள் நாம் இன்று எங்கே இருக்கிறோம் என்றெண்ணிப் பார்த்தால் இக்கவலை நமக்கு ஏற்படாது.

அரசியல் ஒரு கடல்; அதிலே குப்பைகள் சேருவது இயற்கை. ஒவ்வொரு குப்பையையும் நாம் கவனித்து சுத்தம் செய்து கொண்டிருக்க முடியாது. குப்பைகள் எல்லாம் நிறைய சேர்ந்ததும் காலையில் எழுந்து கூட்டி அள்ளிப்போடுவது போன்று நம்மை எதிர்க்கும் குப்பைகள் நிறையச் சேரட்டும் ஒருசேர கூட்டி தள்ளி குப்பைத் தொட்டியில் கொண்டு போடுவோம். அதுவரை தோழர்கள் பொறுத்திருக்க வேண்டும். அந்த குப்பைகள் நம்மீது விழுகின்றனவே என்று எண்ணக் கூடாது. அந்தத் துயரம் கூடப்படாது அரசியலில் ஈடுபட முடியாது அதுவும் இந்த நாட்டு அரசியலில்.

என்று தோழர் சம்பத் அவர்கள் குறிப்பிட்டு, வடநாடு, தென்னாட்டை அடக்கி ஆள்வது குறித்தும், ஓர வஞ்சனையாக நடத்துவது குறித்தும், நமது கடந்த கால போராட்டங்களின் விளைவுகள் குறித்தும் விளக்கமாகப்பேசிக் கொண்டிருக்கையில் மழை வந்துவிடவே கூட்டம் முடிவுற்றது.

## குடவாசலில் ஈ.வி.கே.சம்பத்

16—7—54 அன்று குடவாசலில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில், தோழர்கள் ஈ வி. கே. சம்பத், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர்.

தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசுகையில் திராவிடர்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை என்றும், 1947 ஆகஸ்டில் வந்ததாகச் சொல்லப்படும் சுயராஜ்யம், நடைமுறையில் வடநாட்டிற்குக் கிடைத்த சுயராஜ்யமேயன்றி, திராவிடருக்கு அதில் பங்கு கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். வடநாட்டுக்காரர்களுக்குத் தாங்கள் உரிமையுடனும், நலமுடனும் வாழ மட்டுமன்று திராவிடத்தின்மீது ஆதிக்கம் செலுத்திச் சுரண்டிப் பிழைக்கவும் 'அந்தச் சுயராஜ்யம் வசதி செய்து கொடுத்திருக்கிறது. இன்றைய சுயராஜ்யம் வடவருக்கு வாழ்வளிக்க—திராவிடரின் வாழ்வைப் பறிக்கவந்த சுயராஜ்யம் என்பதை கடந்த ஏழு ஆண்டு சுயராஜ்யம் தெளிவாகக் காட்டியுள்ளது. இந்தியா என்னும் சுரண்டல் அமைப்பிலிருந்து நாம் விலகும் நாளே நமக்கு விடுதலை நாள்" என்று விளக்கிப் பின், இலங்கையில் இடர்ப்படும் திராவிடர்களை, டில்லி புறக்கணிப்பதை எடுத்துக் கண்டித்தார்.

கடந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி வெற்றி கண்ட போராட்டங்கள் குறித்துப் பேசிய பிறகு, கூட்டம் இனிது முடிந்தது.

திருச்சியில் உறையூர் வட்டார திராவிட முன்னேற்றக் கழக ஆண்டு விழா 18—7—54 ஞாயிறன்று, தோழர் எம். என் மணி தலைமையில் சிறப்புற கொண்டாடப்பட்டது. தோழர் எம். என். மணி மும்முனைப் போராட்டங்கள் குறித்தும், திராவிடநாடு விடுதலை பற்றியும் பேசினார். அடுத்துப் பேசிய தோழர் நெடுமாறன். கல்லக்குடி போராட்டம் பற்றித் தாறுமாறாகக் குறை கூறித் திரியும் தோழர்களுக்குப் பதிலளித்தார்.

இறுதியாகப் பேசிய தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் இந்தியாவின் சுயராஜ்யம் திராவிடர்களைப் பொறுத்தவரை பெரும் மோசடியாக விளங்குவதைக் குறித்தும், கடந்த 7 ஆண்டுகளாக திராவிடம் எந்த அளவுக்குச் சுரண்டப்பட்டு வஞ்சிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கியும் 5 ஆண்டு திட்டப் புள்ளி விவரங்களோடு பேசினார்.

அகில இந்திய ஸ்தாபனங்களான காங்கிரசும், கம்யூனிஸ்டு கட்சியும், சோஷலிஸ்டு கட்சியும் இந்து மகாசபையும், பிறவும் தங்களுக்கிடையே அபிப்பிராய பேதப் பிரச்னைகளில் கருத்து வேற்றுமை கொண்டிருப்பினும், டில்லி ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க திராவிடர்கள் விடுதலை பெற்று நல்வாழ்வும், உரிமை வாழ்வும் பெறுவதைத் தடுத்து வடவர் சுரண்டலுக்கு பாதுகாப்பளிக்க, தங்களுக்கிடையே ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்துப் பணியாற்றி வருவதை, எடுத்துக் காட்டுகளோடு விளக்கிப் பேசிய பின் கூட்டம் இனிது முடிந்தது

## உலக சமாதானத்திற்கு இந்தியா உதவ முடியும்

### பெட்ரண்ட் ரசல் கருத்து

லண்டன், ஜூலை 25—

'கிழக்கு - மேற்கு நாடுகளிடையே காணப்படும் கருத்து வேற்றுமைகளையும் தீர்க்க முடியாது இருபகுதிகளிடையே இடையூறு செய்யும் பிரச்னைகளையும் நடுநிலைமை நாடுகளின் தலையீட்டால் தவிர்க்க முடியும். அதிலும் குறிப்பாக இந்தியாவினால் அப்பணியைச் செய்ய முடியும்.'

இவ்வாறு, 'பிக்சர் போஸ்ட்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையில் ஆங்கிலத்தில் தலைசிறந்த எழுத்தாளரும் சிந்தனையாளருமான பெட்ரண்ட் ரஸல் எழுதியுள்ளார்.

தைரியமும், பிரச்னைகள் முதலில் எடுத்துச் செல்லும் போக்குமிருந்தால் நடுநிலைமை நாடுகள் எவ்வளவோ சாதனைகளைப் புரிய முடியும். கம்யூ

(4-ம் பக்கம் பார்க்க)

## டாட்டா இரும்புத் தொழிற்சாலைக்கு ரூ. பத்து கோடி கடன்!

### இந்திய சர்க்கார் தாராளம்!

புதுடில்லி, ஜூலை 26—

இந்திய சர்க்கார், டாட்டா இரும்புத் தொழிற்சாலைக்கு ரூ. 10-கோடி கடன் தருவதென்று முடிவு செய்திருக்கிறது. இதற்கான ஒப்பந்தம் சென்ற மே மாதமே ஏற்பட்டதாம்.

மூன்று ஆண்டுகளாக இக்கடன் பற்றி இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகிறது. இந்த ஆண்டிலதான் இறுதியான முடிவு ஏற்பட்டது.

டாட்டா இரும்புத் தொழிற்சாலையின் அபிவிருத்திக்காக இக்கடன் அளிக்கப்படுகிறது. டாட்டா கம்பெனியார் தொழிற்சாலையின் உற்பத்தியைப்பெருக்க ரூ 21 கோடி திட்டமொன்றை வகுத்துள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 1,81,000 டன் இரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுமென்று தெரிகிறது. இது தவிர சாதாரண நடைமுறைச் செலவாக டாட்டா கம்பெனியார் ரூ. 12 கோடி செலவிட திட்டமிட்டிருக்கின்றனர்.

இந்த ரூ. 33 கோடியில் 21-கோடியை கம்பெனியின் சேமிப்பான நிதியிலிருந்து எடுத்துக் கொள்வார்கள் என்றும் மீதம் உள்ள ரூ 10 கோடியைத்தான் இப்போது இந்திய சர்க்காரிடம் கடனாகப் பெறுகின்றனர் என்றும் தெரிகிறது.

ஆறு ஆண்டு காலத்தில் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டு டாட்டா இரும்புத் தொழிற்சாலை சிறந்த முறையில் திருத்தி அமைக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தியாவில் பைப்கள் செய்வதற்கு டாட்டா கம்பெனியார் இதன் மூலம் திட்டமிட்டிருக்கின்றனர்.

# மத்தியதரவகுப்பினர்வாழ்வு உயர வேண்டும்

## என். ஜி. ஓ.-க்களுக்கு மத்திய சர்க்கார் ஊழியர்கள் பஞ்சப்படி வேண்டும்

## டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் கருத்து

சென்னை, ஜூலை 25—

மத்திய தர வகுப்பினரின் வாழ்க்கை நிம்மதியில் தான் அதிலும் குறிப்பாக கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களின் பாதுகாப்பில் தான் சர்க்காருக்கு சிறந்த உழைப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியும்.

—என்று டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் சென்னை கெஜட் பதிவு இல்லாத ஊழியர்களின் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

கெஜட் பதிவானவர்கள்—கெஜட் பதிவில்லாதவர்கள் என்ற பிரிவினையே சரியில்லை. இப்பிரிவினை சர்க்கார் ஊழியர்களில் ஒரு பகுதியினரிடத்தில் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மையையும், மற்றொரு பகுதியினரிடையே தாழ்ந்தமனப்பான்மையையும் ஏற்படுத்த உதவும். முதலில் இந்த வேற்றுமை நீக்கப்பட வேண்டும். தேவையென்றால் சர்க்கார் நிர்வாக அதிகாரிகளை முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பினர் என்று இருவகை பாகம் பிரிக்கலாம்.

ஒரே ஊரில், ஒரேமாதிரியான வேலைகளைச் செய்வோரில், மத்திய இராஜ்ய சர்க்கார் ஊழியர்களிடையே சம்பளத்தில் வேறுபாடு காணப்படுவது நேர்மையல்ல.

இராஜ்ய சர்க்காரின் கெஜட் பதிவில்லாதவர்களுக்கு மத்திய சர்க்காரில் கொடுப்பதுபோல், அதே அளவில் பஞ்சப்படி கொடுக்க வேண்டும். சம்பளத்தை திருத்தி அமைக்கும் பிரச்சினையை தாமதமாக ஆராய்ந்தாலும் இப்பிரச்சினையை முதலில் கவனிக்க வேண்டும்.

மேலும் தொடர்ந்து மத்திய தர வகுப்பினரின் அவலம் பற்றிப் பேசுகையில் ஏ. ராமசாமி முதலியார் கூறியதாவது:—

கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களை விட அதிகமாகத் துன்புறும் மத்திய தர வகுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கது. பாராளு மன்றத்தில் தொழிலாளர்களின் குறைகளை எடுத்துச் சொல்லி கிளர்ச்சி செய்ய உறுப்பினர்கள் உள்ளனர். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக பாடுபட வேண்டியதுதான். அதே நேரத்தில், தொழிலாளர்கள் இதுவரையில் செய்து வந்ததைப்போல், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அளவு வேலைகளைச் செய்யும் எல்லை வரையில்தான் அவர்கள் தங்கள் தொழிலுக்கான வருவாயைப் பெற முடியும். ஆனால் மத்திய தர வர்க்கத்தினரைப் பற்றிப் பேச அவர்களின் பிரச்சினைகளுக்காக வாதிட யாருமே இல்லை. இந்த மக்களின் உள்ளம் கலங்கி வறுமையின் ஆதிக்கத்தால் எவ்வாறு இதும் பாகி விட்டன என்பதை நான் பார்த்திருக்கிறேன்.

பெரும்பான்மையான குடும்பங்களில் வருவாய் உள்ளவர் ஒரே ஒரு ஆள்தான். இந்த நிலைமைகள் உடனே மாற வேண்டும். குடும்பத்தில் ஆணும் பெண்ணும் வருவாயுள்ளவர்களாகும் நிலை ஏற்பட வேண்டும்.

இப்போதெல்லாம் மத்திய தர வர்க்கத்தினர் ஒதுக்கப் படுகிறார்கள், அல்லது அலட்சியப் படுத்தப்படுகிறார்கள். பெல்ஜியத்தில் சர்க்கார் மத்திய தர வகுப்பினர்க்கு என்று தனியாக ஒரு அமைச்சரையே ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் நாட்டின் முதுகெலும்பு போன்ற வல்லமை மத்தியதர வகுப்பினரிடையே தான் இருக்கிறது என்று பெல்ஜிய சர்க்கார் உணர்ந்து இருக்கிறது.

தேர்தலின் மக்கள் எண்ணிக்கை தேவைப்படலாம். ஆனால், அந்த எண்ணிக்கை நாடு வறுமையில் இருக்கும் போது பயன்தராது. அப்போது தேவைப்படுவது மத்தியதர வகுப்பினர்தான்.

நாட்டை எதிர்நோக்கியுள்ள இந்த அபாயத்தை நாட்டில் உள்ள பல தலைவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

மத்தியதர வகுப்பினரின் துயரங்கள் ஆராயப்பட்டு அவர்களுக்கு ஆவன செய்யப் படும் என்று நம்புகிறேன்.

மத்தியதர வகுப்பினரிடையே காணப்படும் வேலையில்லா திண்டாட்டம் ஒழிக்கப்பட்டு அதன் மூலம் இராஜ்யத்தின் பாதுகாப்பு நிலை நிறுத்தப்படும் என்று நம்புகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் ராமசாமி முதலியார், தொழிலாளர்களின் பொறுத்த மட்டில் ஆட்குறைப்பை ஒப்புக் கொள்ளாத சர்க்கார் 10, 15 ஆண்டு காலம் வேலையில் இருக்கும் தனது ஊழியர்களை ஆட்குறைப்பின் மூலம் வெளியேற்றுவது தவறு என்று குறிப்பிட்டார்.

### கம்யூனிஸ்டுத் தலைமைக் காரியாலயம்

#### பர்மா போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டது

இரங்கூன், ஜூலை 26—

பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் இரகசியத் தலைமைக் காரியாலயம் ஒன்று சந்தர்ப்ப வசத்தால் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிகிறது.

தாகின்-தான்-டின் என்பவரின் தலைமைக் காரியாலயம் அது தான் என்று கச்சின் போலீஸ் படையினர் கூறுகின்றனர்.

கலகக் காரர்களைத் தேடிச் சென்ற கச்சின் படையினர், பள்ளத் தாக்கு ஒன்றில் ஒருகொட்டகையினர் பந்தடிக் கொண்டிருப்பதைக் கண்டனர். இவர்கள் மீது கச்சின் போலீஸ் படையினர் திடீரெனத் தாக்கினர். பர்மாவின் முக்கிய கம்யூனிஸ்டு தலைவர்களில் ஒருவரான தக்கின்-தான்-டின் எப்படியோ தப்பித்தார். ஆனால் ஏராளமான சிகார்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிகிறது.

இச்சம்பவத்தில் கம்யூனிஸ்டுகளின் தரப்பில் பர்மிய படையின் முன்னாள் தளபதியான மேஜர் மைண்ட் என்பவர் மாண்டார் என்று தெரிகிறது.

### திருவள்ளுவர் திருநாள்

29—7—54 வியாழன் அன்று சென்னைக் கிறித்தவக் கல்லூரி, ஆண்டர்சன் மண்டபம், தாம்பரத்தில் தோழர் எம். கே. சண்முகம் தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன் பேசுவார்.

* * *

30—7—54 மாலை 6 மணிக்கு ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம், எஸ்பிளனேடில் தோழர் ஏ. ஜெயபதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், அப்துல் சமத் ஆகியோர் பேசுவர்.

* * *

31—7—54 அன்று சென்னை, பெரம்பூர், பேப்பர் மில்ஸ் ரோட்டில் தோழர் ச. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்: தோழர்கள் க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், முனுசாமி (சென்னை மேயர்), வி. பாஷ்யம், எம். சி. ஆகியோர் பேசுவர்.

### பல மொழிகளைத் திணிக்காதீர்!

#### சிறுவருக்கு அளவுள்ள திறனே உண்டு

##### குழந்தைகள் கல்வி பற்றி நீதிபதி மாக்

சென்னை, ஜூலை 27—

குழந்தைகளின் மீது இரண்டு, மூன்று மொழிகளைத் திணிப்பது கற்பிப்பவர் செய்யும் சித்திரவதையாகும்.

குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுதான் திறனும் புத்திசாலித்தனமும் உண்டென்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் மாக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

### சீனப் பிரதமர் வருகை!

சீனப் பிரதமர் சூ-என்-லாய் இம்முக்கு பெர்லினிலிருந்து வார்சா வந்து சேர்ந்திருக்கிறார். விமான நிலையத்தில் அவரை போலந்து பிரதமர் வரவேற்றார்.

### உலக சமாதானத்திற்கு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விஸ்ட்டல்லாத ஆசிய நாடுகளின் இந்தியா இப்பணியைச் செய்ய மிகவும் தகுதிவாய்ந்த நாடாகும் எனவும் அவர் மேலும் கூறுகிறார்.

ஒருவருக்கொருவர் இடையே நிலவும் சந்தேக மனப்பான்மை முயலில் குறையவேண்டும். இரு தரப்பினர்க்கும் தொல்லை தராத வகையில் பரிகாரம் காண விவாதங்கள் நடைபெற வேண்டும். மூன்றாவதாக ஒப்பந்த மொன்று ஏற்பட்டு உலக முழுமையும் கட்டுப்படுத்தும் முறையில் அமைப்பு ஒன்று ஏற்பட வேண்டும். இந்த மூன்றும் நடைபெற்றால்தான் அடுத்த உலகப் போர் சமீபத்தில் இல்லை என்ற உணர்ச்சி உலகில் ஏற்படும் என்று பெட்ரண்ட் ரசல் கூறுகிறார்.

மாஸ்கோ, பீகிங், வாஷிங்டன், லண்டன் போன்ற நகரங்களில் உள்ள இந்தியத் தூதவர்கள் தங்கள் சர்க்காரின் அனுமதியுடன், ஸ்லாவசுகள் தங்கள் நோக்கத்தை போரின் மூலம் அடைய முடியாது என்று எடுத்துச் சொல்லவேண்டும், இரும்புத் திரைக்கு இருபுறமும் உள்ள நாடுகளில் எவராலும் இச்செய்தியை இந்திய சர்க்காரால் எடுத்துச் சொல்ல முடியுமென்று அவர் மேலும் கூறுகிறார்.


எமது புதிய வெளியீடு

அரசியல் — இலக்கியம் — கடவுள்கள் — கலைகள்
மத கொள்கை – தொழில்கள் – விழாக்கள் – பண்புகள்
இவைகள் அனைத்தும் இடம் பெறும் சரித்திர வரலாறு

நாவலர் இரா. நெடுஞ்செழியன், M. A.,
எழுதிய

பண்டைக் கிரேக்கம்

விலை ரூ 1—0—0

★

திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி


### மயிலையில் அண்ணா சொற்பொழிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிட நாட்டை திராவிடர்க்காக்க வேண்டும் என்னும் எமது லட்சியத்தை பார்ப்பனர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். சாதிசனியனும், மதப் பூசலும் ஒழிய பார்ப்பனர்கள் பாடுபட முன்வரவேண்டும் என்று பன்முறை அவர்களை வேண்டினேன்; பலன் மலடி வயிற்று மகன் போலாயிற்று என் வேண்டுகோள்.

பார்ப்பனர்கள் திராவிடரை இன்னமும்புரிந்து கொள்ளாமலிருக்கக் கூடாது. அது ஆபத்தானது. பாகிஸ்தான் கோரிய ஜின்னாவை மூர்த்தண்யமாக எதிர்த்தார்கள். பலன் இந்துக்களும் முஸ்லீம்களும் ஆயிரக் கணக்கிலே பலியிடப்பட்டனர்—பிணமாயினர். இது மட்டுமா? கொடுமைகள் கொஞ்சமா நிலவின அந்த நேரத்தில்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், மனிதன் மிருகமாகி விடுவான், அவனுடைய மனிதத் தன்மை மதிக்கப்படாது போகும்.

'இந்தியா' என்ற சொல் எந்த வேதத்தில் இருக்கிறது. தேவாரம் திருவாசகத்தில் உண்டா? திருவாய் மொழி திருவெம்பாவையில் உண்டா? எதில் இருக்கிறது 'இந்தியா' என்ற சொல். வெள்ளைக்காரன் தந்துவிட்டுப் போன பெயர்தானே இந்தியா என்பது? அவர்கள் சொல்கிறார்கள் திராவிடம் கற்பனை என்று.

'Dravidian India' திராவிட இந்தியா என்று டி. ஆர். சேஷய்யங்கார் எழுதியுள்ள புத்தகத்தில் அவர் இமாலயப் பிரதேசம், கங்கை சமவெளி, (டெக்கான்பிளேட) தக்ஷணச் சமவெளி என மூன்று பாகங்களாக அல்லவா 'இந்தியா'வைக் கூறுபோட்டுள்ளார். இது கற்பனையா? சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளுக்கு திராவிட மொழிகள் என்றுதானே பெயர். இது கற்பனையா? தமிழ்த் தாத்தா என்றழைக்கப்படும் உ. வே. சுவாமிநாத அய்யருக்கு திராவிட கலா பூஷணம் என்றுதானே பட்டம். இது கற்பனையா? எது கற்பனை என்று சொல்கிறார்கள் அவர்கள்—நமக்குத் தெரிய வேண்டும்.

இதை எல்லாம் நான் சொல்வதின் காரணம் பார்ப்பனர்கள் பாராவது கொந்த உள்ளத்தினர் காட்டும் தவறான காரணங்களில் மயங்கி ஏமாறக்கூடாதென்பதற்காகத்தான்.

வடநாட்டுடன் சேர்ந்திருப்பதால் தென்னாட்டிற்குஎன்ன லாபம்? நான் சொல்கிறேன், நாம் வடவருடன் ஒட்டிக் கொண்டிருக்கும் வரையில் நாட்டில் நிலவும் அவலங்கள் ஒழிக்கப்பட முடியாது, நிர்வாகமும், திறமையாக இருக்காது."

### பிற்பட்ட வகுப்பு விசாரணைக் குழு

#### அடுத்த மாதம் சென்னை வருகை

சென்னை, ஜூலை 27—

மத்திய அரசாங்கத்தாரால், சமூக பொருளாதாரத் துறையில் பிற்பட்டுக் கிடக்கும் மக்களின் நிலை பற்றி விசாரித்தறிய நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக் குழு, வருகிற ஆகஸ்டு மாதம் 18-ந் தேதியிலிருந்து 25-ந் தேதி வரை சென்னை மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்யும் ஆந்திர மாநிலத்திற்கு ஆகஸ்டு 2-ந் தேதி அந்தக் குழு வருகைதரவிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்தும் அந்தக் குழு, இப்போதுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியல் திருத்தப்படவேண்டுமா என்பது பற்றிய அபிப்பிராயங்களைக் கோரும் எனத் தெரிகிறது.

### சிபார்சு!

ஜப்பானுக்கு காலனிலிருந்து 1957-க்குள் அமெரிக்கத் துருப்புகளை வாபஸ் பெற வேண்டுமென்ற யோசனையை அமெரிக்க இராணுவ தலைமை மாற்றிக் கொள்ளுமாறு சிபார்சு செய்திருக்கிறது.

### நன்றி

உடையார்பாளையம் மறைந்த ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் செல்வி தோழியர் மங்கையர்க்கரசி தோழர் ராமச்சந்திரன் அவர்கள் 13—6—54 அன்று வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொண்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 10/- தரப்பட்டது. வரப்பெற்றோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.